# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2019–2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................ நேரம்: 90 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

தமிழர் வீரத்தைக் கூறும் நூல் ___புறநானூறு___ .

( சிலப்பதிகாரம், புறநானூறு, ஆத்திசூடி )

1. **ஏ** என்ற எழுத்தைத் தொடர்ந்து வரும் எழுத்து __________ .

   ( அ, உ, ஐ )

2. நரி __________ .

   ( ஊளையிடும், குரைக்கும், கத்தும் )

3. ஈபில் கோபுரம் __________ உள்ளது.

   ( பாரிசில், இத்தாலியில், லண்டனில் )

4. தரைவழியாகச் செல்வதற்குப் பயன்படும் உந்து __________ .

   ( விண்ணுந்து, மிதியுந்து, நீருந்து )

5. __________ தமிழீழத்தின் தேசிய மலர்.

   ( மல்லிகைப்பூ, தாமரைப்பூ, கார்த்திகைப்பூ )

6. எறும்பு ஊரும். அது போல் தவளை __________.

   ( தத்தும், பறக்கும், ஓடும் )

7. குரங்கின் ______________ நீளமானது .

( வாழ், வாள், வால் )

8. பள்ளி + பாடம் ____________________ .

( பள்ளிப்பாடம், பள்ளிபாடம், பள்ளிய்பாடம் )

9. கடல் உணவுகளில் ஒன்று ____________________ .

( முருங்கை, வெண்டை, நண்டு )

10. தண்ணீர் என்பதன் எதிர்ச்சொல் ____________________ .

(வெந்நீர், கடல்நீர், குளிர்நீர்)

11. அடங்காப்பற்று என அழைக்கப்பட்ட இடம் ______________ .

( யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு )

12. **ஒலிவட்டு:**

காட்டில் அகவிய பறவை ____________________ .

( குயில், மயில், கிளி )

13. சோழரது கொடி ____________________ ஆகும்.

( மீன்கொடி, புலிக்கொடி, விற்கொடி )

14. தகடூரை ஆண்ட மன்னன் ____________________.

( அதியர்மான், பாரி, சங்கிலியன் )

15. 70 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________ .

( எலுபது, எழுபது, எளுபது )

16. தங்கை இன்று பாடம் படிக்கிறாள். தங்கை நாளை பாடம் ____________________ .

( படிப்பாள், படித்தாள், படிக்கின்றாள்)

17. ஆற்றுநீர் ____________________ என்று ஓடுகிறது.

( விறுவிறு, சலசல, மளமள )

18. தந்தைக்குத் தாய் போல, மாணவனுக்கு ____________________.

( தோழி, மாணவி, நண்பி )

19. துணி ____________________ செய்யப்படுகிறது.

( நூலால், இரும்பால், ஓலையால் )

20. மங்கல நிகழ்வுகளின்போது வீட்டு வாசலில் கட்டப்படும் மரம் ____________________ .

( பலா, வாழை, மா )

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| அழகாக | ~~எழுதிய~~ | ஆங்கிலேயருடன் |
| மல்லிகை | கடகட | மோனலீசா |

**எ - கா**

நீங்கள் ___எழுதிய___ அஞ்சல் கிடைத்தது.

1. ____________________ ஓவியம் சிறந்த ஓவியமாகும்.

2. இரவு நேரத்தில் பாரிசு நகரம் ______________க் காட்சி அளிக்கும்.

3. ________________ மாலையில் மலரும்.

4. பண்டாரவன்னியன் ____________________ போர் புரிந்தான்.

5. மாட்டுவண்டிகள் கற்பாதையில் ______________________ எனச் சென்றன.

புள்ளிகள் 05

**3) மிகப்பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

**எ - கா**

எலி வளையில் ______வாழும்______ .

1. பறவைகள் கூட்டங்கூட்டமாக வானத்தில்

______________________ .

2. கோயில் மணி கணீர்கணீர் என்று

______________________ .

3. நான் தமிழ்ப்பள்ளி ஆண்டுவிழாவிற்குச் __________________ .

4. தம்பி பாலை விரும்பிக் ______________________ .

5. சிறுவர்கள் கடற்கரை மணலில் ______________________ .

புள்ளிகள் 10

**4) சொற்களை ஒழுங்குபடுத்திப் பொருத்தமாக எழுதுக.**

எ - கா

புலவர் / சிறந்த / ஔவையார் / ஒரு

ஔவையார் ஒரு சிறந்த புலவர் ________.

1. தண்ணீரில் / நீந்தியது / வாத்து

________.

2. பயன்படுகிறது / வயல் / எருது / உழுவதற்குப்

________.

3. பூவும் பிஞ்சும் / காணப்பட்டன / மாமரத்தில்

________.

4. வன்னியைக் / ஐரோப்பியரால் / கைப்பற்றமுடியவில்லை

________.

5. தமிழரின் / கூறுகிறது / பண்பாட்டைக் / சிலப்பதிகாரம்

________.

புள்ளிகள் 10

**5) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | தொ | ண் | ணூ | று | நா | ம |
| த் | ந | ல் | வ | ழி | ல | ணி |
| தி | ஒ | இ | X | நூ | டி | மே |
| சூ | ன் | ரு | மூ | று | யா | க |
| டி | று | ப | து | X | ர் | லை |
| ஏ | X | து | ரை | ப | த் | து |
| மு | தி | ரு | க் | கு | ற | ள் |

| **நூல்கள்** | **எண்கள்** |
|---|---|
| (எ - கா) | |
| ஆத்திசூடி | தொண்ணூறு |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |

புள்ளிகள்10

6) **மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| எருது | தயிர் | வீட்டை |
| பளுவான | ~~நன்மைகள்~~ | பால் |

எ - கா

விலங்குகளால் எங்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆடு, ஆ என்பன ________________ தருகின்றன. பால் சத்தும் சுவையும் உடையது. ஆவின் பாலில் இருந்து ________________ மோர், வெண்ணெய், நெய் என்பன பெறப்படுகின்றன. ________________, குதிரை போன்ற விலங்குகள் வண்டி இழுக்கப் பயன்படுகின்றன. வயல் உழுவதற்கும் எருது பயன்படுகிறது. யானை ________________ பொருட்களைத் தூக்குவதற்கும் நாய் ________________ க் காப்பதற்கும் பயன்படுகின்றன.

புள்ளிகள் 10

7) **ஒரு சொல்லில் விடை எழுதுக.**

**எ - கா**

அறநூல் ஒன்றின் பெயரைத் தருக.

திருக்குறள்

1. கிளைகள் இல்லாத மரம் ஒன்றின் பெயரைத் தருக.

______________________________

2. எங்கள் தாயகம் எதனால் சூழப்பட்டுள்ளது?

______________________________

3. பண்டாரவன்னியனின் நடுகல் எங்கே அமைந்துள்ளது?

______________________________

4. அதியர்மான் காட்டில் கண்ட மரத்தின் பெயர் என்ன?

______________________________

5. கொன்றை வேந்தன் என்ற நூலை எழுதியவர் யார்?

______________________________

புள்ளிகள் 10

**8) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தைப்பொங்கல் தமிழருடைய திருநாள். தைப்பொங்கல் தை முதலாம் நாள் கொண்டாடப்படும். இதை உழவர் திருநாள் என்றும் அழைப்பர். பொங்கல் அன்று முற்றத்தில் கோலம் போடுவர். கரும்பு கட்டுவர். புதுப்பானையில் பொங்கல் பொங்குவர். பொங்கலைக் கதிரவனுக்குப் படைப்பர். பின்னர் பொங்கலை அயலவர்களுடன் சேர்ந்து உண்பர். இந்நாளில் சிறுவர்கள் மகிழ்ச்சியாகக் காணப்படுவர்.

எ - கா

தைப்பொங்கல் யாருடைய திருநாள்?

தைப்பொங்கல் தமிழருடைய திருநாள்________ .

1. தைப்பொங்கல் எப்போது கொண்டாடப்படும்?

   ____________________ .

2. தைப்பொங்கலை எவ்வாறு அழைப்பர்?

   ____________________ .

3. பொங்கல் அன்று எங்கே கோலம் போடுவர்?

   ____________________ .

4. எதில் பொங்கல் பொங்குவர்?

   ____________________ .

5. பொங்கலை யாருக்குப் படைப்பர்?

   ____________________ .

புள்ளிகள் 10

9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

புள்ளிகள் 15

______________________________